1995 ஏப்ரல் 4]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்துகொண்டால் நிச்சயமாக அவர்களுக்கு அந்தக் கடன் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் கண்டிப்பாக செய்து தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 215, திரு. பி.வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

215 —

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் ஊனமுற்றோர் நலப்பள்ளி அமைத்தல்.

***25106**—*திரு. பி.வி. இராஜேந்திரன்* :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் நடப்பாண்டில் விடுதி வசதியுடன் கூடிய ஊனமுற்றோர் நலப்பள்ளி அமைத்திட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அப்பள்ளியை தொண்டு நிறுவனங்கள் மூலமே செயல்படுத்த ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் நடப்பாண்டில் ஏதும் ஊனமுற்றோர் நலப்பள்ளி அமைத்திடுவதற்கு பரிசீலனையில் இல்லை. ஆனால் தொண்டு நிறுவனங்கள் யாராவது முன்வந்தால் அதற்கு ஏற்ற உதவிகள் செய்து தரப்படும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனம் என்பது பலவகை நோயினால் ஏற்படுகிறது. குறிப்பாக போலியோ நோயினால் பாதிக்கப்படும்போது கை, கால் ஊனம் ஏற்படுகிறது. ஆகவே போலியோ நோயினை முழுமையாக ஒழித்து, அவர்களுக்கு வேண்டிய கருவிகள் அனைத்தும் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் உள்ளம் ஊனமுற்றவர்களுக்கு, அவர்களுக்காவது ஒரு நலப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 4

முற்பகல் 10.55

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளம் ஊனம் உற்றவர்கள் அவர்களாகவேதான் திருந்த வேண்டுமே ஒழிய, அதற்கு தனிப்பள்ளி அமைக்க இயலாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் நீங்கள் போலியோ நோயினால் ஏற்பட்டிருக்கிற ஊனத்தை சரி செய்வதற்காக கேட்டிருக்கிறீர்கள். நாகைப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் ஏற்கெனவே ஒரு சிறப்பு பள்ளி அரசு மானியத்தோடு இயங்கி வருகிறது. ஆனால் இந்த போலியோ நோயை முழுமையாக இந்த ஆண்டு தமிழகம் ஒழித்து விடும். 1995ல் போலியோ ஃப்ரீ ஸ்டேட் தமிழ்நாடு என்று அறிவிக்கக் கூடிய சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சமீபத்திலே வெளியிடப்பட்ட உடல் ஊனமுற்றோர் கொள்கை வெளியீட்டின்போழுது, மத்திய நலத்துறை அமைச்சர் அவர்களிடம் இதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். தமிழகம் அதிலே முன்னணியில் இருக்கிறது என்பதற்காக மத்திய நலத் துறை அமைச்சர் சீதாராம் கேசரி அவர்கள், புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டி நேற்றையதினம் 50 லட்சம் ரூபாயை இந்த அரசுக்கு வழங்கியிருக்கிறார்கள். ஐ.டி.பி.எல். நிறுவனத்தின் மூலமாக முழுமையாக அது வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் க. கோபால்.

டாக்டர் க. கோபால். : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாகை-காயிதே மில்லத் மாவட்டம் என்பது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டம். மேலும் அங்கு கிராமப்பகுதிகள் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், அங்கே படிப்பறிவு இல்லாத ஏழை ஆதி திராவிட மக்கள் அதிகமாக வாழ்கிற பகுதியாகவும் இருப்பதால், அங்கு அவர்களுடைய குழந்தைகளுக்கு முழுமையான இம்மியூனைசேஷன் பண்ணாத காரணத்தால், குறிப்பாக போலியோ நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அதிகமாக இருக்கிறார்கள். அப்படி பாதிக்கப்பட்ட குழந்தைகள் எல்லாம் தங்களுடைய ஆரம்ப கல்வியை அவர்களுடைய கிராமத்திலேயே உள்ள துவக்கப் பள்ளிகளில், தங்கள் பெற்றோர்களுடன் தங்கியிருந்து படிக்கிறார்கள். ஆனால் உயர் கல்வி பெறுவதற்காக ஒரு விடுதியுடன் கூடிய ஒரு நலப் பள்ளி, இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் வருகிற ஆண்டில் துவங்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டம் என்பதனால் சமூக நலத்துறை இப்போதுதான் அங்கே முழுமையாக தன் வேலைகளை துவங்கி அதற்குரிய பயிற்சிகள் அனைத்தும் அளித்துக் கொண்டிருக்கிறது. ஊட்டச் சத்து திட்டம் அங்கே நிறைவேற்றப்பட்டு விட்டால், இப்படிப்பட்ட குறைகளே இல்லாத அளவிற்கு வந்து விடும். எதிர் காலத்தில் ஊனமுற்ற, மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் இல்லாத அளவுக்கு அந்த மாவட்டம் வந்து விடும். ஆனால் இப்போதும் கூட அந்த மாவட்டத்தில் மன வளர்ச்சி குன்றியவர்களுக்காக சிறப்பு பள்ளி ஒன்று செயல்பட்டு வருகின்றது. மூன்று கட்டடங்களில் 24 மன வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு சிறப்பு கல்வி அளிக்கப்படுகிறது. தேவைப்பட்டால் தொண்டு நிறுவனங்கள் முன் வந்தால் அவர்களுக்கு முழு உதவி அளிப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 216, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

216—

விழுப்புரத்தில் வேலை வாய்ப்பு அலுவலகம் அமைத்தல்.

***24953**—*திரு. சி. இராமசுவாமி :*

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தை விழுப்புரத்திற்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், சங்கராபுரம் புதிய தாலுகாவாக உருவாகி உள்ளதால், வேலைவாய்ப்பு அலுவலகம் அங்கேயே செயல்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சங்கராபுரத்திலுள்ள துணை வேலைவாய்ப்பு அலுவலகம், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்துடன் இணைக்கப்பட்டு 30-9-1993 முதல் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இல்லை.